பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 27 | புதன்கிழமை | 10.04.2024 | அதிர்வு 253

## இன்று நோன்புப் பெருநாள்




இலங்கையின் பல பகுதிளில் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டுள்ளமை உறுதிப் படுத்தப்

06▶



# தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம்: பின்னணியில் ராஜபக்ஷக்களா?

## சுமந்திரன் எம்.பி. சந்தேகம்

"ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முன்மொழிவு வருகின்றபோது எங்களுக்குப் பாரிய சந்தேகங்கள் ஏற்படுகின்றன. இதன் பின்னால் ராஜபக்ஷக்கள் இருக்கின்றார்களா? தீவிரவாத - இனவாத சிங்கள சக்திகள் இருக்கின்றார்களா? போன்ற கேள்விகள் எழுகின்றன."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

06▶

## தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்க தமிழரசில் சுமந்திரன் மட்டுமே எதிர்ப்பாம்

### இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றார் சுரேஷ்




(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் பலர் ஆதரவாக இருந்தாலும் சுமந்திரன் எதிராகவே இருக்கின்றார் என்று ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்

06▶



தேர்தல் என்றால், தொடை நடுங்கும் ரணிலார், உள்ளூராட்சித் தேர்தலை நடத்த நிதி இல்லை என்று கைவிரித்தவர். உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் கடந்த ஓராண்டாக இன்றுவரை அதுதான் அவரின் நிலைப்பாடு.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் நெருங்குவதால், நாட்டில் நாளொரு அபிவிருத்தி திட்டமும் பொழுதொரு உதவி மானியமும் குறித்து அவரது அரசு அறிவிக்கத் தவறுவதில்லை.

மக்களின் நல்வாழ்வு திட்டங்களுக்கு என்ற பெயரில் பல்லாயிரம் கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களை அடுத்தடுத்து அறிவிக்கும் அவரின் அரசினால் நிலுவையில் நிற்கும் உள்ளூராட்சித்

06▶





# இராணுவ வீரர்களின் நலனுக்காக அரசாங்கம் நிவாரணம் வழங்கும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு அரசாங்கத்தினால் முடிந்த அனைத்து நிவாரணங்களும் வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டேயில் அமைந்துள்ள பாது காப்பு அமைச்சின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற – போரினால் பாதிக்கப்பட்ட இராணுவத்தினருக்கு மின்சார மோட்டார் சைக்கிள் வழங்கும் – நிகழ்விலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்படி அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரின் வாழ்வாதாரத்தை மேம்படுத் தும் வகையில், 17 மில்லியன் ரூபா செலவில் 50 மின்சார மோட்டார் சைக்கிள்கள் இதன்போது வழங்கப்பட்டன.

இன்று காலை பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத் திற்கு வருகைத் தந்த ஜனாதிபதிக்கு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்னவினால் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

நிகழ்வில் அடையாள அம்சமாக அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் சிலருக்கு ஜனாதிபதியால் மின்சார சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு இராணுவ வீரர்களுக்கு மின்சார மோட்டார் சைக்கிள்கள் வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் தொழில் முயற்சியை மேம்படுத்த முடியுமென இராணுவச் சேவை அதிகாரசபை நம்பிக்கை தெரிவிக்கிறது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் ஒருமைப்பாட்டையும், சுயாதீனத் தன்மையையும் பாதுகாக்க உயிரைப் பணயம் வைத்து போராடிய இராணுவ வீரர்களுக்கு நன்றி கூறினார்.

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கான மேலும் 76 மின்சார மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்வதற் கான நிதி ஒதுக்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு இராணுவ வீரர்களின் நலனுக்காக உயர்வான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வின் நிறைவில் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுடன் ஜனாதிபதி சிநேக பூர்வமாகக் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி சவேந்திர சில்வா, முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், இராணுவச் சேவை அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகா ரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



# ஜே.வி.பியின் கூட்டத்துக்கு சுமந்திரன் அழையா விருந்தாளியாவே வந்தாராம்!

## யாழ் அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தி மாநாட்டில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனுக்கு தனிப் பட்ட அழைப்பை எமது கட்சி விடுக்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திர சேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலா ளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கே இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாநாட்டுக்கு தமிழ் கட்சிகளுக்கான அழைப் பினை வழங்கினோம் அல்லாமல் தனிப்பட்ட அழைப்பு விடுக்கவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு தனிப் பட்ட அழைப்பை எமது கட்சி வழங்கவில்லை. தானாகவே அவர் மாநாட்டுக்கு வந்தார். வந்தவரை வரவேற்கும் பண்பின் அடிப்படையில் அவரை அழைத்தோம்.

ஆனால் வந்த சுமந்திரன் எமது கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவிடம் இந்தியாவைப் போல் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் நமது கட்சியின்



தலைவருக்குக் கூறினார் எனச் செய்திகள் வெளி வந்தன என அறிந்தோம்.

அத்துடன் சமஷ்டியைப் பற்றியோ தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பிலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சம்பந்தன் மற்றும் சிறிதரனை விட நமது கட்சியின் தலைவர் அநுரவுக்கு நன்கு தெரியும்.

ஆகவே நாம் தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து பணி யாற்ற விரும்புகிறோம். ஆனால் தனி நபர்களை அழைத்து அரசியல் செய்யும் நோக்கம் எமது கட்சிக்கு இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# அநுரகுமார 3 தடவைகள் தொடர்பு கொண்டு அழைப்பு விடுத்தார் என்கின்றார் சுமந்திரன்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்திற்கு கடந்த வாரம் தேசிய மக்கள் சக்தி யின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கா வந்தபோது 3 தட வைகள் தொலைபேசியில் அழைத்தமையின் நிமித்தம் நேர டியாகச் சென்றேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சுமந்திரனுக்கு தனிப்பட்ட அழைப்பை எமது கட்சி விடுக்க வில்லை எனவும், அழையா விருந்தாளியாக வந்தவரையே வந்தாரை வரவேற்கும் பண்பிற்கமைய வரவேற்றோம் என்வும், மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப் பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தமை தொடரபில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாநாட்டுக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்கா அன்றுமாலை 3 தடவைகள் தொலைபேசியில் நேரடியாக அழைப்பெடுத்து எனக்கு அழைப்பு விடுத்தார். இதன்போது கூட்டத்திலும் பங்குகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

இருந்தபோதும் கூட்டத்தில் பங்குகொள்ள முடியாது, கூட்டம்



நிறைவுற்றதும் சந்திக்கின்றேன் எனக்கூறி கூட்டம் நிறைவு பெறும் எனக் கூறப்பட்ட நேரத்திற்குச் சென்றேன். அப்போதும் கூட்டம் நிறைவுபெறாத சூழலில் காத்திருந்து சந்தித்தேன். இதேநேரம் அநுரகுமார திஸாநாயக்கவிடம் நான் பேசி யவற்றைச் சந்திரசேகரனிற்கு கூறவேண்டிய கட்டாயம் கிடையாது.

அத்துடன் சமஷ்டியைப் பற்றியோ, தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பிலோ, எனக்கோ கூட்டமைப்பின் தலை வர் சம்பந்தன், எமது கட்சியின் சிறிதரனை விட, அநுரவுக்கு எவ்வளவு தெரியும் எனபவை உள்ளிட்ட ஏனைய விடயங்களை யும் இடம்பெற்றவைகளையும் அவர் தனது தலைவரிடமே கேட்டு அறிந்துகொள்ள முடியும். – என்றார்.

# இலங்கையுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு சாட் குடியரசு விருப்பம்



ஆபிரிக்க நாடான சாட் குடியரசுடன், இராஜதந்திர உறவுகளை ஸ்தாபிப்பதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய பலதரப்பு மன்றங்களில் சாட் குடியரசு இலங் கைக்கு ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

இந்த நிலையில், சாட் குடியரசு இலங்கையுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, சாட் குடியரசுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகா ரம் வழங்கியுள்ளது.

# கெஹெலியவின் நீதிப் பேராணை மனு மீதான விசாரணை தொடர்பில் ஏப்ரல் 30 இல் முடிவு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் நீதிப் பேராணை மனுவை விசாரணைக்கு எடுப்பதற்காக அறிவித்தல் விடுப்பதா? இல்லையா? என்ற தீர்மானம் எதிர்வரும் 30 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தரமற்ற தடுப்பூசிகளை கொள்வனவு செய்தமை தொடர்பில் தம்மை விளக்க மறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை வலுவற்றதாக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல இந்த நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் டி.என்.சமரக்கோன் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

அதன்போது, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவை விசாரணை செய்வதற்கு அறிவித்தல் வழங்காமல் தள்ளுபடி செய்யுமாறு நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர்.



# பொருள்களை தாமதிமின்றி விநியோகிக்க மத்திய தபால் பரிவர்த்தனை நடவடிக்கை

## ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தகவல்

“புத்தாண்டு காலத்தை முன்னிட்டு மத்திய தபால் பரிவர்த்தனைக்கு கிடைக்கப்பெறும் அதிகளவிலான பொருள்களை தாமதமின்றி அனுப்பி வைக்கும் நோக்கில் ஏப்ரல் 12 ஆம் திகதி பொது விடுமுறை நாளிலும், கடமையில் ஈடுபடுவதற்கு அனைத்து தபால் ஊழியர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.”

– இவ்வாறு ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“மத்திய தபால் பரிவர்த்தனைக்கு இந்த புத்தாண்டுக் காலத்தில் அதிக எண்ணிக்கையிலான பொருள்கள் வந்தடைந்துள்ளன. வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அதிக அளவில் பொருள்களை அனுப்பியுள்ளனர். புத்தாண்டு காலம் என்பதால் அந்தப் பொருள்களை துரிதமாக விநியோக்க வேண்டிய சவால் ஏற்பட்டுள்ளது.

இதன் போது நெருக்கடிகள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் ஏப்ரல் 12 ஆம் திகதி பொது விடுமுறையாக இருந்தாலும் அன்றைய தினம் சேவைக்கு சமூகமளிக்க தபால் மா அதிபர் மற்றும் தபால் தொழிற்சங்கங்கள் மற்றும் அனைத்து ஊழியர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். சுங்கத் திணைக்கள் அதிகாரிகளும் அதற்கான ஒத்துழைப்பை வழங்கவுள்ளனர்.

மேலும், கடந்த சில ஆண்டுகளாக மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டனர். எரிபொருளுக்காக மக்கள் வரிசையில் நின்றனர். ஆனால், இம்முறை புத்தாண்டுக்குள் எரிபொருளுக்காக வரிசையில் நிற்காமல் ஆடைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருள்களை வாங்க மக்கள் திரள்வதை காணமுடிகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் பலனாகவே



இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் சரியான வழிக்காட்டலின் கீழ் கிடைத்த வெற்றியின் பலனை மக்கள் அனுபவிக்கின்றனர்.

மேலும், புத்தாண்டுக் காலத்தில் உணவு பொருள்களின் விலை இரட்டிப்பாகி உள்ளதென பலரும் சாடினாலும், 2022/2023 ஆண்டுகளுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது உண்மை புரியும். எனவே நாட்டை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்திற்கு தொடர்ச்சியாக ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், பணப்புழக்கம் சாராமல் சீனாவிடம் இருந்து பெறப்பட்ட 1.5 பில்லியன் டொலர்களுடன் வெளிநாட்டுக் கையிருப்பு 4.9 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ள நிலையில் இந்த ஆண்டு இறுதிக்குள் 5 பில்லியன் டொலர்களை அது கடந்துவிடும் என நம்புகிறோம்.

தற்போது தேர்தல் மனப்பான்மை எங்களிடம் இல்லை. தற்போதைய பொருளாதார வேலைத்திட்டத்தை தொடர விரும்புகிறோம். சரியான நேரத்தில் தேர்தலை நடத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் அதற்கு முகம்கொடுக்க தயாராக இருக்கிறோம். தற்போது பொருளாதாரத்தைப் பலப்படுத்துவது குறித்தே கவனம் செலுத்துகிறோம்.” – என்றார்.



# சு.கவுக்குள் பெரும் குழப்பம்: தாய்லாந்து பறந்த மைத்திரி

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அதிகாலை தாய்லாந்து பயணமாகியுள்ளார். அவருடன் மேலும் ஒன்பது பேர் பயணித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. தலைவர் பதவியை வகிக்க மைத்திரிக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்நிலையில், பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் நியமனம் சட்டவிரோதம் என மைத்திரி தரப்பு கூறியுள்ளது.

இதற்கிடையில்சு.கவின்தலைமையகத் துக்குப் பூட்டு போடப்பட்டுள்ளது. நேற்றுக் காலை பதில் பொதுச்செயலாளர் துஷ்மந்த மித்ரபால தலைமையிலான குழுவொன்று அங்கு சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

நிலைமை இவ்வாறிருக்க மைத்திரி நேற்று தாய்லாந்து சென்றுள்ளார்.



# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் இன்று தீர்மானம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான முக்கிய தீர்மானத்தை மேற்கொள்வதற்காக சம்பள நிர்ணய சபை இன்று கூடவுள்ளது.

இதற்கமைய, இன்று முற்பகல் 10 மணிக்கு தேயிலை நிர்ணய சபையும், பிற்பகல் 2 மணிக்கு இறப்பர் நிர்ணய சபையும் கூடவுள்ளன.

இதன்போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த வாக்கெடுப்பில், முதலாளிமார் சம்மேளனம் சார்பில் 8 உறுப்பினர்களும், தொழிற்சங்கங்கள் சார்பில் 8 உறுப்பினர்களும் வாக்களிக்கவுள்ளனர்.

அதேநேரம், தொழில் அமைச்சின் சார்பாக 3 உறுப்பினர்களும் இந்த வாக்கெடுப்பின் போது, வாக்களிக்கவுள்ளனர்.

கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து முதலாளிமார் சம்மேளனம் விலகிய நிலையில், மீள கூட்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு இணக்கப்பாடும் இதுவரை எட்டப்படவில்லை.

இந்த நிலையில், சம்பள நிர்ணய சபையின் ஊடாக கடந்த முறை 1,000 ரூபா நாளாந்த சம்பளம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.


இதனடிப்படையில், இம்முறையும் முதலாளிமார் சம்மேளனத்துடன் பல்வேறு கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், அவை தோல்வியில் நிறைவடைந்திருந்தன.

தற்போதைய பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக குறைந்த பட்சம் 1,700 ரூபாயை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தொழிற்சங்கங்கள் நாளாந்த சம்பளமாக 2,000 ரூபாயை முன்மொழிந்துள்ளன எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இன்று இடம்பெறவுள்ள வாக்கெடுப்பில் தொழிற்சங்க தரப்பினரே வெற்றி பெறவுள்ளனர் என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

## தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு 779 கைதிகளுக்குப் பொது மன்னிப்பு



தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு 779 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 34 (1) பிரிவிற்கமைவாக ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த விசேட பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கைதிகளை பார்வையிட 11,12,13 இல் அனுமதி!



புனித ரமழான் நோன்புப் பண்டிகை மற்றும் தமிழ் – சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 11, 12, 13ஆம் திகதிகளில், சிறைக் கைதிகளைப் பார்வையிடுவதற்கு சிறப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி பி. திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

புனித ரமழான் நோன்புப் பண்டிகையை முன்னிட்டு சிறையில் உள்ள இஸ்லாமிய கைதிகளை, எதிர்வரும் 11ஆம் திகதி பார்வையிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, தற்போதுள்ள விதிமுறைகள், முறையான சுகாதாரப் பாதுகாப்பு முறைகளின்படி, கைதிகளின் உறவினர்களின் வீட்டிலிருந்து கொண்டு வரப்படும் உணவு, இனிப்புப் பண்டங்கள் மற்றும் சுகாதாரப் பொருள்களை மாத்திரம் வழங்குவதற்கு, அனைத்து சிறைச்சாலைகளிலும் நடவடிக்கை எடுக்கப்படுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி பி திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தலை நடத்துவதற்கு சில நூறு கோடி ரூபாக்களை ஒதுக்க முடியாமல் இருப்பது விந்தைதான்.

நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பு உயர்ந்துவிட்டது, பொருளாதார மேம்பட்டு வருகின்றது என்றெல்லாம் தேர்தலுக்கு முந்திய புளுகு மூடை அறிவிப்புக்கள் அடுத்தடுத்து வருகின்றன. அவை எதிர்பார்க்கப்பட்டவைதான்.

ஆனால், இதற்கிடையில் உலக வங்கி நாட்டின் உண்மை முகத்தை அம்பலப்படுத்திக் காட்டுகின்றது.

கடந்த இரண்டாம் திகதி அது வெளியிட்ட அறிக்கையின்படி, நாட்டில் கால்வாசி மக்கள் வறுமை கோட்டின் கீழ் விழுந்து விட்டனர். 26 வீத மக்கள் நேரடியாக வறுமையில் வாடுகின்றனர் என்பது புள்ளிவிவரங்களுடன் அம்பலமாகி இருக்கின்றது.

நாட்டின் வறுமை நிலை 2019 ஆக 11 வீதமாகத்தான் இருந்தது. இப்போது அது 26 வீதமாக உயர்ந்து விட்டது என்று உலக வங்கி சுட்டிக் காட்டுகிறது.

இலங்கைக் குடும்பங்களின் வருமானம் சராசரியாக 60 வீதத்தால் விழுந்து விட்டது.

விலைவாசி உயர்வால் 17.5 வீத இலங்கைக் குடும்பங்கள் கல்வி மற்றும் சுகாதார – மருத்துவ செலவுகளை வெட்டி முடக்கி விட்டன என்று அந்த அறிக்கை கூறுகிறது.

ஆனால், ரணிலும் அவரது அரசு தரப்பினரும் மட்டும் நாட்டின் பொருளாதாரம் சுபீட்சத்தை நோக்கி பயணிப்பதாக கயிறு விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கின்றன. மின்வெட்டு இல்லை. புதிய ரூபா நோட்டு அச்சிடுதலும் இல்லை. ஆனால் இவையெல்லாம் பொருளாதாரம் மேம்பட்டு விட்டது என்பதற்கான அறிகுறிகள் அல்ல. வாங்கிய கடனை இன்னும் நாம் மீளச் செலுத்தத் தொடங்கவில்லை. அது இல்லாமல் நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பு உயர்ந்து விட்டது என்று அறிவிப்பது வெறும் கப்ஸாதான்...!

# இந்த வருடம் ரமழான் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர் இலங்கை வாழ் முஸ்லிம்கள்

## வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

"இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கு ரமழான் பண்டிகையை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வாய்ப்பு இந்த வருடம் கிடைத்துள்ளதையிட்டு நான் ஆனந்த மடைகின்றேன்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

"இஸ்லாமிய நாட்காட்டியில் ஒன்பதாவது மாதமாகக் கருதப்படும் புனித ரமழான் மாதமானது, முஸ்லிம் சகோதரர்களுக்கு சிந்தனை மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கான மாதமாகக் கருதப்படுகின்றது. இந்த ரமழான் மாதம், நல்வாழ்வு மற்றும் நல்வாழ்வின் கலங்கரை விளக்கமாக இருப்பதோடு நம்மிடையே ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தை வளர்க்கின்றது.

சாதி, மத பேதமின்றி இலங்கையர்கள் என்ற வகையில் நாம் அனைவரும் எதிர்கொண்ட இக்கட்டான காலகட்டத்தைக் கடந்து நாட்டில் நல்லதொரு சூழல் உருவாகியுள்ள இவ்வேளையில் எமது சக முஸ்லிம்களுக்கு ரமழான் பண்டிகையை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வாய்ப்பு




இந்த வருடம் கிடைத்துள்ளதையிட்டு நான் ஆனந்தமடைகின்றேன்.

இந்நாட்டில் ரமழான் நோன்புக்காலத்தை முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி, அனைவரும் தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் காலமாகக் கருதுவதே சரியானதென நான் நினைக்கின்றேன்.

தனி மனித முன்னேற்றத்தைப் பொருட்படுத்தாமல், கூட்டுச் சமூக விழுமியங்களை உயர்த்துவதற்காக உருவாக்கப்படும் இவ்வாறான விடயங்கள், வீழ்ச்சியடைந்த இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும், நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வதற்குமான கூட்டு முயற்சிக்கான அடிப்படையை வழங்கும் என்றும் நான் நம்புகின்றேன்.

அர்ப்பணிப்பு, சுயக்கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை உள்ளிட்ட ரமழானில் முன்னிலைப்படுத்தப்படும் விழுமியங்கள், அதை நோக்கிய பயணத்தில் சரியான வழிகாட்டியாக அமையும் என்ற எதிர்பார்ப்புடன், இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கும், முழு உலக முஸ்லிம் சமூகத்திற்கும் சமாதானம், நல்லிணக்கம் நிறைந்த இனிய ரமழான் பெருநாளாக அமைய இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்." – என்றுள்ளது.

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறங்கும்போது அதை மையமாக வைத்தே தீவிரவாத, இனவாத சிங்கள சக்திகள் ஒன்றுசேர்ந்து அவர்களுடைய கைகளைப் பலப்படுத்துகின்ற சம்பவம் நிகழலாம்.

ஆகவே, தோற்றுப்போயிருக்கும் ராஜபக்ஷ தரப்பினருக்குத் திரும்பவும் உயிரூட்டும் ஒரு செயலாகக்கூட அது அமையலாம்.

இந்த ராஜபக்ஷக்களே முன்னைய காலங்களில் இப்படியான ஒரு யுக்தியைக் கையாண்டு ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஒவ்வொரு தேர்தல்களிலும் நிறுத்தியும் இருக்கின்றார்கள்.

இப்படி நிறுத்திவிட்டு இப்பொழுது புலி வந்துவிட்டு என்று சொல்லி புரளியையும் கிளப்புவார்கள்.

ஆகவே, இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முன்மொழிவு வருகின்றபோது எங்களுக்குப் பாரிய சந்தேகங்கள் ஏற்படுகின்றன. இதன் பின்னால் ராஜபக்ஷக்கள் இருக்கின்றார்களா? தீவிரவாத – இனவாத சிங்கள சக்திகள் இருக்கின்றார்களா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

எனினும், தமிழ்ப்பொது வேட்பாளர் விவகாரம் பற்றி இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்னமும் பேசவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரத்தை நாங்கள் சாதகமாகப் பரிசீலிப்போம் என்று என்னால் இப்போது கூற முடியாது." – என்றார்.

## சுரேஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கானத் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான கலந்துரையாடல் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஆனால், இதுவரை வேட்பாளர் யார் என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவில்லை. ஆனாலும், மதங்களைக் கடந்து வடக்கு – கிழக்கைப் பிரதிநிதிப்படுத்தும் ஒருவரே பிரேரிக்கப்படுவார்.

இதேவேளை, தமிழ்த் பொது வேட்பாளர் தொடர்பில் மலையக மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். ஆகையினால் அவர்களுடனும் பேசவுள்ளோம். அதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் இந்த விடயத்தில் சம்மதித்தால் அவர்களுடனும் பேச நாம் தயார்.

மேலும், தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை அதன் முக்கிய தலைவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் நிலைப்பாட்டில் ஆதரவாக உள்ளனர். ஆனாலும், அக்கட்சியின் சுமந்திரன் போன்றோர் இதற்கு எதிராகவே உள்ளனர்." – என்றார்.

## இன்று நோன்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டுள்ளதால் இன்று 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாள் தினம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹிஜ்ரி 1445ஆம் ஆண்டின் புனித ஷவ்வால் மாத தலைப்பிறை நாட்டின் சில பிரதேசங்களில் நேற்று மாலை தென்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டமையால் இலங்கை வாழ் முஸ்லிம்கள் இன்று நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

புனித ஷவ்வால் மாத தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு, ரமழான் மாதத்தின் 29ஆம் நாளான நேற்று மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து, கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்ற பிறைக்குழு கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் ஒரு சில இடங்களில் பிறை தென்பட்டதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், பிறை காணப்பட்ட விடயத்தை உறுதிப்படுத்த சில மணித்தியாலங்கள் சென்ற நிலையில் மிக நீண்ட ஆலோசனை மற்றும் கலந்துரையாடல்களின் பின்னர் பிறைக் குழுவினால் ஏகமனதாக குறித்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைப்பிறை தீர்மானிக்கும் இந்த மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழு உறுப்பினர்கள், பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், இலங்கை வக்பு சபை, முஸ்லிம் சமய கலாசார திணைக்கள அதிகாரிகள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மற்றும் பிறைக் குழு உறுப்பினர்கள், மேமன், ஹனபி பள்ளிவாசல் பிரதிநிதிகள், இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# புத்தாண்டுக் காலத்தில் விபத்துகள் குறித்து கவனம்

## அரசாங்கம் அறிவுறுத்தல்

எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக் காலத்தில் வீதி விபத்துக்கள் மற்றும் பட்டாசு விபத்துக்களைக் குறைத்துக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அரசாங்கம் பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கிறது.

பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிப்பதாலேயே 36 வீத விபத்துகள் ஏற்படுகின்றன எனவும், அதனால் 17 வீத மானோர் கண் பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர் என்றும் தெரியவந்துள்ளது.

எனவே எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் வீதி விபத்துக்கள் மற்றும் பட்டாசு விபத்துக்களை மட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை போக்குவரத்து அமைச்சு, சுகாதார அமைச்சு என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

அதன்படி, பண்டிகைக் காலத்தில் வீதி விபத்துக்களை மட்டுப்படுத்துதல் குறித்து பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக போக்குவரத்து அமைச்சு மற்றும் வீதி பாதுகாப்பு தேசிய சபை ஆகியன நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது.

இதன்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் சஜித் ரணதுங்க, நேருக்கு நேராக முச்சக்கர வண்டிகள் மோதிக்கொள்வதால் இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் மக்கள் கடுமையான விபத்துக்களில் சிக்கியவர்கள் இன்னும் முழுமையாக குணமடையவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் அதிகளவு அதிவேக வீதிகளுக்கு வெளியில் இடம்பெறும் விபத்துக்களிலேயே அதிகளவானோர் மரணிக்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் நாளாந்தம் 10 பேர் வரையில் உயிரிழக்கின்றனர் எனவும் விபத்துக்களை மட்டுப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்த வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதனையடுத்து, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் நவோமி ஜயவர்தன, பண்டிகைக் காலத்தில் பஸ்களினால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கு ப உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல், போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் தொடர்பில் 1955 என்ற அவசர இலக்கத்திற்கு 24 மணித்தியாலங்களும் அறிவிக்க முடியும் என்பதோடு, கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு உடனடியாக பதிலளிக்க அதிகாரிகள் தயாராக உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.













நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதி(யற்ற) அரசர்!

"சம்பந்தன் தற்பொழுதும் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்திலேயே வாழ்ந்து வருகின்றார். அரச பெரும்புள்ளிகளின் தயவிலேயே அவர் அங்கு வாழ்கின்றார். சிங்கள வேட்பாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய தமிழரின் வாக்குகள் சிதறிப் போவதை இதனால்தான் அவர் எதிர்க்கின்றார். தமிழர்களின் இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கூர்ந்து அவதானித்தாரானால் - தமிழரின் எதிர்காலம் பற்றி ஆழமாக சிந்திப்பாரானால் - தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதை அவர் மனமார வரவேற்க வேண்டும்."

- இப்படி கூறியிருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

மூத்த தமிழ் அரசியல் தலைவரான சம்பந்தன் மீது மிகவும் சிறுமைத்தனமான - அற்பத்தனமான - கீழ்மைத்தனமான - அரசியல் குற்றச்சாட்டு இது.

நேரடி அரசியலில் ஆக பத்தாண்டுகள் மட்டுமே அனுபவம் கொண்ட நீதியரசர் விக்னேஸ்வரனின் சிறுபிள்ளைத்தனமான - கற்றுக்குட்டித்தனமான - வஞ்சகச் சாடுகை இது என்பது கற்றறிந்த தமிழ் அரசியல் வட்டாரங்களில் நிச்சயம் உணரப்படும்.

ஆனால் நீதியரசர் விக்னேஸ்வரன் மாதிரி திருநீறணிந்து சாமியார் போல தோற்றம் காட்டும் மூத்தவர் ஒருவரிடம் இருந்து இத்தகைய அபத்தமான குற்றச்சாட்டை எதிர்கொள்ளும் அவல நிலைமை சம்பந்தனுக்கு இத்தனை கால அரசியலின் பெறுபேறாகக் கிட்டுவது அவசியம்தான். சம்பந்தனுக்கு இதுவும் வேண்டும், இதற்கு மேலும் வேண்டும் - விக்னேஸ்வரனை அரசியலுக்குக் கூட்டி வந்து தமிழர் தலையில் கட்டிய பெருங்குற்றத்துக்கு.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த அனைவரினதும் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் -

தான் தலைமை வகித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் அனைத்தினதும் ஆட்சேபனையையும் புறந்தள்ளி -

தான், தனி ஒருவராக முடிவெடுத்து, வடக்கு மாகாண சபையின் முதல்வர் பதவிக்கு ஒற்றைக் காலில் நின்று, நீதியரசர் விக்னேஸ்வரனை கூட்டி வந்தவர் சம்பந்தன்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முடக்கத்துக்கு பின்னர் தமிழ் தேசியத் தரப்பின் ஏக தலைவராக முகிழ்ந்த சம்பந்தன், தனது அந்த 15 ஆண்டு கால தலைமையில் இழைத்த பெரும் அரசியல் தவறு எது என்று அரசியல் அரிச்சுவடி படிக்காத ஒருவரிடம் கேட்டால் கூட, தனித்துப் பிடிவாதமாக நின்று விக்னேஸ்வரனை வடக்கு முதலமைச்சர் பதவிக்கு அவர் கூட்டி வந்தமைதான் என்று கூறி விடுவர்.

ஆனால், இன்று வரை, முதுமையினால் சற்று அமைதியாகும் இன்றைய தினம் வரை, அந்த வரலாற்றுத் தவறை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளாதவர் சம்பந்தன். அது மாத்திரமல்ல, தான் தனித்து முடிவெடுத்து, எங்கோ ஓய்வில் இருந்த விக்னேஸ்வரனை கொண்டு வந்து, பெரும் ஒளிவட்டம் பொருந்திய தலைவர் போல தமிழ் மக்கள் முன்பு நிறுத்தியதின் மோசமான விளைவுகளை அடுத்தடுத்து எதிர்கொண்ட பின்னரும், விக்னேஸ்வரன் மீது பகிரங்கக் குற்றச்சாட்டு வைத்தவர் அல்லர் அவர். குறை கூடச் சொன்னவர் அல்லர்.

வடக்கிலும் கிழக்கிலும் தமது தமிழரசு கட்சியின் வீழ்ச்சிக்கு எங்கிருந்தோ அரசியலுக்குத் தான் கூட்டி வந்து, ஒரே நாளில் பெரிய தலைவராக்கிய விக்னேஸ்வரன்தான் காரணம் என்பதை நன்கு புரிந்தும், அது பற்றிய சினத்தை அடக்கி, நாகாத்தவர் சம்பந்தன்.

இவ்விடயத்தில் சம்பந்தனுக்கு எத்துணை சீற்றம், வெப்பியாரம், ஏமாற்றம், வெஞ்சினம் எல்லாம் மனதுக்குள் கொப்பளித்துக் கொண்டிருந்தன என்பது அவருக்கு நெருங்கி பழகியவர்களுக்குத் தான் நன்கு தெரியும். ஆனால் தமது அரசியல் முதிர்ச்சியின் காரணமாக அவற்றை அடக்கி கொண்டவர் சம்பந்தன்.

எனினும், அவர் அப்படி தனி ஒரு மனிதராக நின்று அரசியலின் உச்சத்துக்குத் தூக்கி நிறுத்தியவர் தன் நரித்தனத்தை - அரசியலில் நயவஞ்சகப் புத்தியை - வெளிப்படுத்தி விட்டார் தமது இத்தகைய குற்றச்சாட்டு வாசகங்கள் மூலம்.

கொழும்பில் தாம் வசிக்கும் அரச இல்லம் என்ற சொகுசு வசதிக்காகத்தான் தங்களின் பொது வேட்பாளர் என்ற திட்டத்திற்கு உடன்பட சம்பந்தன் மறுக்கின்றார் என்று பகிரங்க அர்த்தப்படுத்தலை விக்னேஸ்வரன் முன் வைத்திருக்கின்றமை உருத்திராட்சப் பூனை ஒன்றின் அரசியல் அறிவையும், பரந்த விசாலத்தனத்தையும், பண்பியல்பையும் தமிழ் மக்கள் அளவிட போதுமானவை.

# மொசாம்பிக்கில் இடம்பெற்ற படகு விபத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



தென்கிழக்கு ஆப்பிரிக்க நாடான மொசாம்பிக்கில் இடம்பெற்ற படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 94 ஆக அதிகரித்துள்ளது.

வடக்கு கடற்கரை வழியாக ஒரு மீன்பிடி படகில் நேற்று சுமார் 130 பேர் பயணம் செய்துள்ளனர்.


நம்புலா மாகாணத்திலிருந்து தீவை நோக்கி அந்தப் படகு பயணித்துக்கொண்டிருந்த போது, எடை தாங்காமல் படகு மூழ்கியுள்ளது.


அதிகம் பேர் ஒரே படகில் பயணித்ததாலும், படகு மோசமான நிலையில் இருந்ததாலும் இந்த விபத்து இடம்பெற்றதாகவும் விபத்தில் 94 பேர் உயிரிழந்தனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்களில் குழந்தைகளும் அடங்குவர்.

நம்புலா மாகாணத்தில் கொலரா பரவுவதாக தகவல் கிடைத்ததால், அச்சத்தில் அங்கிருந்து படகு மூலம் தப்பிச் செல்ல முயன்றவர்களே அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாக விசாரணைக்குழு அமைத்து, விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்தோனேசியாவில் 6.1 ரிக்டர் நிலநடுக்கம்





இந்தோனேசியாவின் கிழக்கு மாகாணமான மேற்கு பப்புவாவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என நாட்டின் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலா நடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 ஆக நிலநடுக்கம் பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரான்சிகி நகருக்கு கிழக்கே 41 கிலோ மீற்றர் தொலைவிலும், கடலுக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்திலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால், சுனாமி எச்சரிக்கை எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்த எந்த தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்பெயினுக்கு பயணிப்பவர்களுக்கு பிரித்தானியா எச்சரிக்கை விடுப்பு

ஸ்பெயினுக்கு பயணிக்க உள்ள சுற்றுலாப்பயணிகளுக்கு இரத்த மழை தொடர்பில் பிரித்தானியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஸ்பெயினில் சில இடங்களில் வெப்ப அலை காரணமாக கடுமையான வெயில் நீடித்து வருகிறது.

இதனால், சஹாரா பாலைவனத்தில் காணப்படும் தூசுக்கள் ஸ்பெயினின் பல பகுதிகளை மூடவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில், தற்போது ஸ்பெயினின் சில இடங்களில் மழை பெய்து வருவதால், இந்த தூசியும் மழையும் கலந்து இரத்த மழை என்னும் சிவப்பு நிற மழை உருவாக வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரத்த மழையினால் வெளிச்சம் குறையும் எனவும், விமானங்களால் பயணிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் என கூறப்படுகின்றது.

எனவே, வெளிச்சம் போதாமையால் விமானங்கள் இரத்து செய்யப்படலாம் அல்லது தாமதமாகலாம் என பிரித்தானிய வெளியுறவு துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.



இதன் காரணமாக ஸ்பெயினுக்கு சென்றுள்ள பிரித்தானியர்கள் மேற்படி இயற்கை மாறுபாட்டால் பாதிக்கப்படக் கூடும் என பிரித்தானிய வெளியுறவு அலுவலகம் எச்சரித்துள்ளது.

# சென்னையில் பிரதமர் மோடி வீதி ஊர்வல பிரச்சாரம் செய்தார்

சென்னை தி.நகரில் இடம்பெற்ற வீதி ஊர்வல பிரச்சாரத்தில் பிரதமர் மோடி நேற்று பங்கேற்றார்.

பிரதமர் மோடி தாமரை சின்னத்தை பொதுமக்களிடம் காட்டியபடி பேரணியாக சென்று, பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரினார்.

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி நடைபெறும் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி இரண்டு நாள் சுற்றுப் பயணமாக தமிழகம் வந்துள்ளார்.

சென்னை விமான நிலையம் வந்தடைந்த பிரதமர் மோடியை பா.ஜ.க. நிர்வாகிகள் வரவேற்றனர். விமான நிலையத்தில் இருந்து வீதி ர்க்கமாக தி.நகரில் நடைபெற்ற வீதி ஊர்வல பிரச்சார நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்றார்.

தென் சென்னை தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜனை ஆதரித்து தியாகராய நகர் பனகல் பூங்கா முதல் தேனாம்பேட்டை சிக்னல் வரையிலான பாண்டி பஜார் வீதியில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு வீதி ஊர்வலம் மூலம் பிரச்சாரம் மேற்கொண்டார்.

வழியின் இருபுறங்களிலும் ஏராளமான பா.ஜ.க. தொண்டர்கள், பிரதமர் மோடிக்கு மலர்களைத் தூவி வாழ்த்தி வரவேற்றனர்.



பிரதமர் பேரணி வந்த வாகனத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, தமிழிசை சவுந்தரராஜன், மத்திய சென்னை பா.ஜ.க. வேட்பாளர் வினோஜ் பி.செல்வம், வட சென்னை பா.ஜ.க. வேட்பாளர் பால் கனகராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

பிரதமரின் வீதி ஊர்வல பிரச்சாரம் நிகழ்ச்சியையொட்டி 5 அடுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. 3,500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு, கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இயக்குநர் அமீர் மீண்டும் விசாரணைக்கு அழைப்பு



போதைப் பொருள் வழக்கு தொடர்பாக மீண்டும் விசாரணைக்கு ஆஜராக இயக்குநர் அமீருக்கு என்.சி.பி. அதிகாரிகள் மீண்டும் அழைப்பாணை அனுப்பியுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல் வழக்கு தொடர்பாக சென்னையில் உள்ள ஜாபர் சாதிக் வீடு, இயக்குநர் அமீர் வீடு, அலுவலகம் உள்பட 30 இற்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் நேற்று அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

இந்த நிலையில், போதைப் பொருள் கடத்தல் வழக்கு தொடர்பாக இயக்குநர் அமீரை மீண்டும் விசாரணைக்கு ஆஜராக போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி இதே வழக்கு தொடர்பாக டில்லி என்.சி.பி. அலுவலகத்தில் அமீர் விசாரணைக்கு ஆஜராகினர். அப்போது அவரிடம் சுமார் 11 மணிநேரம் விசாரணை செய்யப்பட்டது.

அதன்பின்னர், கடந்த 5 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு ஆஜராக அமீருக்கு உத்தரவிடப்பட்டது. தற்போது மீண்டும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அமீருக்கு போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

விசாரணைக்கு வரும்போது கடந்த மூன்று ஆண்டுகளாக பயன்படுத்திய வங்கி கணக்குகள், மூன்று ஆண்டுகளாக தன் குடும்பத்தின் பெயரில் வாங்கிய சொத்துகள் மற்றும் ஜாபர் சாதிக் உடன் தொழில் பங்காளராக இணைந்ததற்கான ஆதாரங்கள் ஆகியவற்றை அமீர் தாக்கல் செய்ய உத்தரவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

ஆனால், இவற்றை தயார் செய்ய கால அவகாசம் வேண்டும் என அமீர் வேண்டுகோள் வைத்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

# மூத்த அரசியல் தலைவர் ஆர்.எம்.வீரப்பன் காலமானர்

எம்.ஜி.ஆர். கழகத்தின் நிறுவனரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.எம்.வீரப்பன் தனது 97 ஆவது வயதில் நேற்று காலமானார்.

உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த இவர், சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதாவின் அமைச்சரவையில் அமைச்சராக பதவி வகித்த ஆர்.எம்.வீரப்பன், பல சினிமா திரைப்படங்களையும் தயாரித்தவர் ஆவார்.

தமிழகத்தில் மூத்த திராவிட அரசியல் தலைவர்களில் ஆர்.எம்.வீரப்பன் முக்கியமானவர்.

இந்த நிலையில் மறைந்த ஆர்.எம்.வீரப்பனுக்கு பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், திரை உலகினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# பொது வேட்பாளரை நிறுத்தி வாக்குகளை சிதறடிப்பது தமிழர் பிரச்சினைக்கான தீர்வை மேலும் தாமதமாக்கும்

## ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டு!




நாட்டின் ஜனாதிபதியாக ஒருவர் தெரிவான பின்னர், அவரிடம் சென்று தமிழ் மக்களுக்கான தேவைகளையோ அன்றி அவர்கள் எதிர்கொள்ளும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பிலோ பேசி, தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையை உருவாக்குவதற்கே வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் தரப்பில் இருந்து பொது வேட்பாளரை நிறுத்தும் சில தமிழ் அரசியல் தரப்பினரது செயற்பாடுகள் அமைகின்றன என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்பேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

நாட்டினது சமகால அரசியல் சூழலுக்கேற்ற வகையில் குறித்த ஒரு தரப்பினர் அல்லது தரப்பு வெற்றிபெறும் வேட்பாளராக இருப்பார் என தெரிந்திருந்தும் அதற்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ள ஜனாதிபதி அபேட்சகரையே இன்றுவரை தமிழர் தரப்பிலிருந்து ஆதரிக்கப்பட்டுவரும் துர்ப்பாக்கியமான வரலாறு இருந்துவருகின்றது.

அதாவது தமிழ் மக்களுக்கும் வெற்றிபெற்று நாட்டின் ஜனாதிபதியாக தெரிவாகவுள்ளவருக்கும் இடையே புரிந்துணர்வு அற்றவகையில், அல்லது நேரடியாக சென்று தமிழ் மக்களின் தேவைகளை பேரம்பேசி பெற்றுக்கொள்ள இயலாதவகையில் தமது சுயநல அரசியலை மேற்கொண்டு வரும் தமிழ் அரசியல் தரப்பினரால் என்றுமே தமிழ் மக்கள் நன்மைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் கிடையாது.

ஆனால் ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் ஏதாவதொரு காரணத்தை கூறி தமது தெரிவு இவர்தான், இவரை ஆதரியுங்கள் என்று கூறி தமிழ் மக்களை ஆதரிக்குமாறு திசைதிருப்பி வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற நிலை மாறி தமிழ் தரப்பிலிருந்து ஒரு பொது வேட்பாளரைத் தெரிவுசெய்து நிறுத்துவது தொடர்பில் சில தமிழ்க் கட்சிகள் முனைகின்றன. இதேநேரம் சிலர் பொது வேட்பாளர் தேவையற்றது என கூறுகின்றனர்.

ஆனால் சிலர் சுயநலன்களுக்காக தமிழ் தரப்பிலிருந்து பொது வேட்பாளரை நிறுத்தி, வாக்குகளை சிதறடிப்பதனூடாக தமிழரது அரசியலுரிமை பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இல்லாது செய்து, பிரச்சினைகளை நீடித்த பிரச்சினையாக வைத்துக்கொள்வதற்கே இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாறாக இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன, அல்லது கூட வந்த குரங்கு ஆண்டால் என்ன என்றிராது நாங்கள் ஜனநாயக ரீதியில் நாட்டின் தலைமையைத் தெரிவு செய்வதனூடாக எமது அரசியலுரிமையை பேசுவதற்கான முகாந்தரத்தை உருவாக்கி கொள்ள வேண்டும். அதேநேரம் நாட்டிலுள்ள அரசியல் முறைமையில் தமிழர் தரப்பால் ஜனாதிபதியாக தெரிவாகக் கூடிய அல்லது வெற்றிபெறக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லை என்றே கூறலாம்.

எனவே இந்த தமிழ் தரப்பினரின் பொது வேட்பாளர் தெரிவு என்பது தேவையற்ற ஒன்றாக இருப்பதுடன் அதனை முன்வைப்பதும் பயனற்றதாகவே இருக்கும்.

மாறாக தமிழ் மக்கள் பேரம்பேசி தமது வாக்குகளை வெற்றிபெறக் கூடிய தரப்புக்கு வழங்கி அவரை ஆதரித்தால் நிச்சயமாக எமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக்கொள்வது இலகுவாக இருக்கம் என்பதே எமது நிலைப்பாடு. – என்றார்.

# மலையக மரக்கறி வகைகளின் விலைகள் நாளாந்தம் வீழ்ச்சி!

## விவசாயிகள் பெரும் விசனத்தில்!

(மஸ்கெலியா நிருபர்: செ.தி.பெருமாள்)

மலையக மரக்கறிகளின் விலைகள் நாளாந்தம் வீழ்ச்சியடைந்து வருவதால், தாங்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என நுவரெலியா மாவட்ட சிறு மலையக மரக்கறி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மலையகத்தில் அனைத்து மரக்கறிகளின் விலையும் மிகவும் குறைந்துள்ளன. ஒரு கிலோ வெண்டைக்காய் 170 ரூபாவாகவும், கரட் ஒரு கிலோ 270 ரூபாவாகவும், ஒரு கிலோ முட்டைக்கோஸ் 170 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு ஒரு கிலோ 260 ரூபாவாகவும், ஒரு கிலோ சோளம் 70 ரூபாவாகவும், பீட்ரூட் கிலோ 120 ரூபாவாகவும், கீரை கிலோ 70 ரூபாவாகவும் விற்பனையாகின்றன. நேற்று ஒரு கிலோ மிளகாய் மொத்த விலையில் 400 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் சிறிய அளவிலான மலையக மரக்கறி செய்கையாளர்களும், பாரிய தோட்டத்தில் சிறிய அளவிலான மலையக மரக்கறி செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும் இந்த நிலைமையை எதிர்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.



புத்தாண்டு சீசன் தொடங்கி, ஒவ்வொரு புத்தாண்டு காலத்திலும் காய்கறிகளின் விலை உயரும் என எதிர்பார்த்து, வங்கிகளில் தங்க ஆபரணங்களை அடகு வைத்து, பல்வேறு கடன் வாங்கி பயிர்கள் செய்த நிலையில், இந்த ஆண்டு, மலையக காய்கறிகளின் விலை, எதிர்பாராதவிதமாக சரிந்து உள்ளது என மரகறி விவசாயிகள் கூறுகின்றனர்.



# மன்னாரிலும் நேற்று மகளிர் கவனயீர்ப்புப் போராட்டம்!

(வாஸ் கூஞ்ஞ)

அரிசியின் விலையை நூறு ரூபாவுக்குக் கீழ் குறைக்கக் கோரி பெண்களின் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று மன்னாரிலும் முன்னெடுக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்கள் எதிர்நோக்கும் சவால்களை முன்னிறுத்தியும் தற்போது அரிசியின் விலையை 100 ரூபாவிற்குக் கீழ் குறைக்கக் கோரியும் வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டினால் இந்தக் கவனவீர்ப்பு நிகழ்வு மன்னார் சுற்றுவட்டத்திற்கு முன்பாக இடம் பெற்றது.

இக்கவனயீர்ப்பு போராட்டத்தின் போது பெண்கள் தங்கள் கைகளில் ஏந்தியிரந்த பதாதைகளில் "பட்டினிச் சாவு எமக்கு வேண்டாம்", "பிள்ளைகளை பட்டினியில் வாட்டாதே", "அரிசியின் விலையேற்றதத்தால் பசியால் வாடுகிறோம்" போன்ற வாசகங்கள் காணப்பட்டன.











# திருமலையிலும் நேற்று பெண்கள் கவனவீர்ப்பு









(எஸ்.கீதபொன்கலன்)

அரிசி விலையை உடனடியாக 100 ரூபாவாகக் குறைக்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கையை முன் வைத்து நேற்றுக் காலை வடக்கு – கிழக்கு பெண்கள் கூட்டு என்ற தன்னார்வ அமைப்பினால் திருகோணமலை நகரசபை முன்பாகவும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'ஏழைகள் வயிற்றில் அடிக்காதே!', 'பட்டினிச் சாவு எமக்கு வேண்டாம்!', 'விவசாய உள்ளீட்டு பொருள்களின் விலையைக் குறை!', 'பிள்ளைகளைப் பட்டினியில் வாட்டாதே!' என்ற சுலோகங்களை ஏந்தியவாறு பெண்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# பொன்னாவெளிக் குழப்பத்தின் பின்னால் மக்கள் விரோதிகளின் அரூபக் கரங்கள்!

## ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் கூறுகிறார்

பொன்னாவெளி பிரதேசத்தில் சுண்ணக்கல் அகழ்வதற்கான ஆய்வுப் பணிகள் தொடர்பில் சில அரசியல் தரப்புக்களினால் உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அப்பிரதேச மக்களின் தேவைகளை மழுங்கடிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்பேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பொன்னாவெளி பிரதேசம் சுண்ணக்கல் நிறைந்த பிரதேசமாகும். அதனால் அங்கே நிலத்தடி நீர் உவர்நீராக உள்ளது. சுண்ணக்கல் அகழ்வு அங்கே நடைபெற்றால் அந்த இடங்களில் மழை நீரைத் தேக்கி நிலத்தைப் பாதுகாக்க முடியும்.

அத்துடன் நன்னீரை சேமிக்கும் போது அந்த நீரை அங்கு விவசாய நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த முடியும். இவ்வாறு பல நல்ல திட்டங்கள் இதில் உள்ளன.

இதேவேளை சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பிரதேசம் உவர் நீரால் சூழப்பட்டுள்ளதாக கூறி மக்கள் அவ்விடத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

இதற்கு முக்கியமான காரணமாக குடிதண்ணீர் இன்மை அமைகின்றது. அதுமட்டுமல்லாது பயன்தரு மரங்களோ, விலங்குகளுக்கான மேய்ச்சல் நிலங்களோ அப்பகுதியில் அருகி வந்தமையால் அப்பகுதியை விட்டு மக்கள் வெளியேறிச் சென்றிருந்தனர் எனக் கூறுப்படுகின்றது.

அவ்வாறான சூழ்நிலையில் சுண்ணக்கல் அகழ்வதனால்தான் நிலம் உவர்நீராக மாறும் எனக் கூறப்படுவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை.

இதேவேளை குறித்த பகுதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடந்த காலத்தில் சுண்ணக்கல் அகழ்வுக்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். அதேபோன்று கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இவ்விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

அவ்வாறான நிலையில் குறித்த பிரதேசம் சுண்ணக்கல் அகழ்வுக்கு சாதகமான இடம்தான் என்பதை பறைசாற்றுகின்றது. அனால் தற்போது சுயநல அரசியல் செயற்பாடுகளே இதைத் தடுக்கின்றன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்திட்டத்தை கையிலெடுத்து குறித்த பிரதேசத்தையும் மக்களையும் அபிவிருத்தியால் கட்டியெழுப்பிவிட்டால் தமது அரசியல் இருப்பு காலியாகி விடும் என்ற அச்சமே இத்தகைய தரப்பினருக்கு கலக்கத்தை ஏற்படுத்தி இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

அதுமட்டுமல்லாது குறித்த பிரதேசத்தின் அபிவிருத்தியையும் தடுத்துநிறுத்த முயற்சிக்கின்றனர்.

இதேவேளை குறித்த தினத்தன்று பொன்னாவெளி கிராமத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பொதுமக்கள் முன்னிலையில் கனிய வள மற்றும் சுற்றுச்சூழல் திணைக்களங்களின் அதிகாரிகளால் அளவீட்டு பணிகளே மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது.

அந்த ஆய்வினூடாக அதிகாரிகள் கூறும் கருத்துக்களை மக்கள் வெளிப்படையாக அறிந்துகொண்டு தமது கருத்துக்களையும் வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

குறித்த ஆய்வில் சாதகமான பதில் கிடைத்தால் குறித்த திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதென்பதும், இல்லை பாதகமான பதில் கிடைத்திருந்தால் அதை கைவிடுவதென்பதுமே எமது நிலைப்பாடக இருந்தது.

இந்நிலையில் உண்மையை அறியாது, விசமிகளின் தூண்டலுக்கு எடுபட்டவர்களையும், போதைப்பொருள் பாவனையாளர்களையும் ஏவிவிட்டு சிலர் மக்களுக்கு கிடைக்கவேண்டிய நலன்களுக்கு துரோகம் செய்துள்ளனர்.

பொன்னாவெளியில் இயற்கை வளமான சுண்ணக்கல்லை பயன்படுத்தினால் அது மக்களுக்குத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தும். இவ்வாறான நல்ல திட்டங்களும், மக்களுக்கு பொருளாதார உயர்வும் கிடைத்துவிடக்கூடாது என்று கருதி மக்களை தொடர்ந்து கையேந்திகளாக துயரத்தில் வைத்திருப்பதன் ஊடாகவே தமது சுயலாப அரசியலை முன்னெடுக்க முடியும் என்று செயற்படும் மக்கள் விரோதிகளே இந்த குழப்பத்தின் பின்னால் மறைகரமாக இருக்கின்றார்கள். என்றும் அவர் தெரிவித்தார்.

# ஆலய மதிலை உடைத்து புகுந்து வாகனம் விபத்து!







(வி.ரி.சகாதேவராஜா)

ஆலய மதிலை உடைத்து கார் ஒன்று விபத்துள்குள்ளாகியுள்ளது. நேற்று அதிகாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரைதீவு விபுலானந்த சதுக்க முச்சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கார்ச் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

கொழும்பில் இருந்து கல்முனை நோக்கிச் சென்ற கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து ஆலய மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

காரைதீவு பிரதான வீதி முச்சந்தியில் அமைந்திருக்கும் அரசடிப் பிள்ளையார் ஆலயத்தின் மதிலை உடைத்துக் கொண்டு ஏர் உள்ளே சென்றுள்ளது.

மேலதிக விசாரணைகளை காரைதீவு பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரூ. 1 கோடி 75 லட்சம் பெறுமதியான கலப்பின சோள விதைகள் தேக்கம்

## வவுனியா விவசாயிகள் திண்டாட்டம்






**(கே.வசந்தன்)**

வவுனியாவில் உற்பத்தி செய்யப்பட்ட 1 கோடி 75 லட்சம் ரூபா பெறுமதியான புதிய கலப்பின சோளன் விதைகளை விற்பனை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

பூவரசன்குளம், குருக்கள் புதுக்குளம், மணியர்குளம், எருக்கலம்கல், வேலங்குளம், பாவற்குளம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 300 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பில் புதிய கலப்பின சோளன் செய்கை பண்ணப்பட்டது.

சோளச் செய்கையில் ஈடுபட்டவர்கள் கலப்பின சோளன் விதைகளை பதப்படுத்தி அதனை நெளுக்குளம் பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சோளன் விதை உற்பத்தி களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள போதும் அந்த சோளன் விதைகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சோளன் உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் பலரும் பெரும் நட்டம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது சிறுபோக பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், ஏற்கனவே சோளன் உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் தவிர ஏனைய விவசாயிகளுக்கு சோளப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளையும், ஆலோசனைகளையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் முறையாக மேற்கொள்ளாமையால் அந்த சோளன் விதைகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இந்த நிலை நீடித்தால் அதன் முளை திறன் குறைவடைந்து அவற்றை கைவிட வேண்டிய நிலை ஏற்படும் என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# உடுவில் மகளிர் கல்லூரியின் 200 ஆண்டு நிறைவு நிகழ்வு






யாழ்ப்பாணம் உடுவில் மகளிர் கல்லூரியின் 200 ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரியின் முதலாவது அதிபர் திருமதி ஹறியட் வின்ஸ்லோ அம்மையாரின் நினைவு தினம் நேற்று பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் ரொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கல்லூரியில் 1824-1833 ஆம் ஆண்டு வரை அதிபராக கடமை புரிந்தவரின் இந்த பணியைப் பாராட்டி பாடசாலையின் 200 ஆண்டில் நினைவுகளை பகிர்ந்து கொண்டமையோடு விசேட பிரார்தனைகளும் இடம்பெற்றன

இந்நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வேலுப்பிள்ளை பத்மதயாளன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், தென்னிந்திய திருச்சபையின் பங்குத்தந்தைகள், பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# பித்ரா கொடுத்து இன்றைய நாளில் ஈதுல் பித்ரைக் கொண்டாடுவோம்



கலாபூஷணம்
பரீட் இக்பால்
(யாழ்ப்பாணம்)

புனித ரமழான் பூராகவும் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளை குதூகலமாக கொண்டாடுகின்றனர்.

ரமழானில் நன்மைகளைக் கொள்ளையிட்ட உள்ளங்கள் ஷவ்வால் மாத தலைப் பிறையுடன் ரமழானுக்கு விடை கொடுத்து விட்டு நோன்புப் பெருநாள் குதூகலத்தில் திளைக்கின்றன.

பெருநாள் தினம் என்பது சிறியோர், பெரியோர், ஏழை, பணக்காரன், முதியவர் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி மகிழ்ச்சியுடன் கழிக்கக் கூடிய தினமாகும். இப்பெருநாள் தினத்தில் நோன்பு நோற்பதை ஹராமாக்கியுள்ள இஸ்லாம் அல்லாஹ்வின் உவப்புக்குரிய வழிகளில் பெருநாளைக் கொண்டாட வழி காட்டியுள்ளது.

பெருநாள் தினம் அல்லாஹ்வை ஞாபகமூட்டக் கூடிய, அவனைப் புகழக் கூடிய தினமாக இருக்க வேண்டுமே தவிர நற்செயல்களுக்கு மூடை கட்டும் தினமாக அமையலாகாது.

ஈதுல் பித்ர் பெருநாளில் அதிகமானளவு நன்மைகளை செய்ய நாம் முன்வர வேண்டும். நாம் மட்டும் பெருநாளைக் கொண்டாட அயல் வீட்டார் பெருநாளைக் கொண்டாட வசதியற்றவனாக இருப்பானேயானால் நாம் கொண்டாடும் பெருநாளில் என்ன தாற்பரியம் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியோடு இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர் பார்க்கின்றது.

முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப் படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது.

ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும்.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் பள்ளிவாசலுக்குச் செல்லும் போது ஒரு வழியால் சென்று மற்றுமொரு வழியால் திரும்பி வருவார்கள். இதன் மூலம் பலரை சந்திக்கவும் ஏழைகளுக்கு உதவி புரியவும் கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள்.

பெருநாள் தினத்தில் வீண் கேளிக்கை, விளையாட்டுக்களை தவிர்த்து சகோதர மதத்தவர்களுடன் புரிந்துணர்வு கருதிய ஒன்றுகூடல்களை நடாத்தலாம். இதன் மூலம் இரு சாரார் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயங்கள் நீங்கி பிரதேச மற்றும் தேசிய அமைதிக்கு வழியேற்படும்.

வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன் பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப்படுகின்றது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போதுமான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளையுடைய ஒவ்வொரு முஸ்லிமும் இத்தகைய வசதிகள் அற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்கு கட்டாயமாகக்

தொடர்ச்சி▼

# பித்ரா கொடுத்து இன்றைய நாளில் ஈதுல் பித்ரைக் கொண்டாடுவோம்

தொடர்ச்சி ▲

கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும், எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதனால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.

ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுகதுக்கங்களில் பங்குபற்றக் கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இந்த உண்மையை ஸகாதுல் பித்ர் அமைப்பு முறையிலும் காணக்கூடியதாக உள்ளது.

பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம் பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதே போன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு. ஓர் ஊரில் அல்லது மஹல்லாவில் வாழும் முஸ்லிம்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாக பிரியாமல் சகலரும் ஒன்று சேர்ந்து ஒரு திறந்த வெளியில் அல்லது மைதானத்தில் இது முடியாத போது ஒரு பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை நடத்த வேண்டும்.

ஈதுல் பித்ர் தொழுகை முடிந்தவுடன் இமாம் நிகழ்த்தும் குத்பா உரையை அனைவரும் கேட்க வேண்டும். தொழுகையை போன்றே குத்பாவும் ஒரு இபாதத் என்பதை மறக்கலாகாது. இவ்வாறு ஓர் இமாமுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் மூலம் முஸ்லிம் சமுதாய அமைப்பு வலுப்பெறுவதோடு தனிப்பட்ட ஒவ்வொரு முஸ்லிமும் பலவகையான நன்மைகளையும் அல்லாஹ்வின் அருளையும் பெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர். பெருநாள் தொழுகை முடிந்ததும் தான் சந்திக்கும் சகோதரர்களுக்கு “தகப்பலல்லா/ஹ மின்னி வமின்க” உங்களுடையதும் என்னுடையதும் நற்செயல்களையும் வாழ்த்துக்களையும் அல்லாஹ் அங்கீகரிப்பானாக! என்று கூறி வாழ்த்து தெரிவிப்பது சுன்னத்தாகும்.

பெருநாள் தினங்களில் உறவினர்கள், நண்பர்கள், மார்க்க ஊழியர்கள் அனைவரையும் கண்டு பேசி உபசரித்து, வாழ்த்துக் கூறி தங்களிடையே பற்றையும் பாசத்தையும் அன்பையும் ஆதரவையும் மென்மேலும் அதிகரித்துக் கொள்வதும் சிறந்த செயலாகும்.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்துகொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு நாம் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்த நாட்டில் இன நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். இப்பெருநாள் தினங்களில் பிற மதத்தவர்களுடன் குரோதம், விரோதம் ஏற்படாத வகையில் புரிந்துணர்வையும் சக வாழ்வையும்



பெருநாள் காலங்களில் கட்டியெழுப்பும் முன்மாதிரியான நிகழ்ச்சிகளை அந்தந்த ஊர்களின் கழகங்கள், ஸ்தாபனங்கள், அமைப்புக்கள் ஏற்பாடு செய்வது வரவேற்கத்தக்க விடயமாக அமையும் என்பது சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகும். இவ் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் பெருநாளாக அமைய அல்லாஹ்வை வேண்டுகிறோம்.

மேலும் இலங்கையில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களாகிய நாம் பெரும்பான்மையினருடனும் ஏனைய சிறுபான்மை சமூகங்களுடனும் பிரச்சினைகளிலிருந்து நீங்கி சமாதானமும் சகவாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத் தன்மையும் புரிந்துணர்வும் ஏற்படவும் அல்லாஹ் அருள் புரிவானாக. இலங்கையில் வாழும் முஸ்லிம்களாகிய நாம் ஏனைய சமூகங்களுடன் பிரச்சினையின்றி வாழவும் இப்பெருநாளில் அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

# தேர்தலுக்கான பிணை வைப்புத் தொகையை திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம்

தேர்தலுக்கான பிணை வைப்புத் தொகையை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் சட்டம், நாடாளுமன்ற தேர்தல் சட்டம் மற்றும் மாகாண சபை தேர்தல் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, தற்போதுள்ள பிணை வைப்பு பணத் தொகையை காலத்திற்கேற்ற வகையில் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பின்னணிக்கு ஏற்ப இற்றைப்படுத்துதல் பொருத்தமானது என அடையாளங்காணப்பட்டுள்ளது.

இதற்கமைய, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியினால் சமர்ப்பிக்கப்படும் வேட்பாளர் ஒருவரின் பிணை வைப்புத்தொகை 2.6 மில்லியன் வரையும், சுயேச்சை வேட்பாளரின் பிணை வைப்புத்தொகை 3.1 மில்லியன் வரையும் அதிகரிக்கப்படவுள்ளது.

1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்திற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் சமர்ப்பிக்கப்படும் வேட்பாளர் ஒருவரின் பிணை வைப்புத்தொகையை 11,000 ரூபா வரையும், சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் ஒருவரின் பிணை வைப்பை 16,000 ரூபா வரையும் அதிகரிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினால் சமர்ப்பிக்கப்படும் வேட்பாளர் ஒருவரின் பிணை வைப்புத் தொகையை 6,000 ரூபா வரையும் சுயேச்சைக்குழு வேட்பாளர் ஒருவரின் பிணை வைப்புத்தொகையை 11,000 ரூபா வரையும் அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.04.2024

## மேஷம்

இன்று நீங்கள் கடுமையான சூழல்களை சந்திக்க நேரிடும். பொறுமையுடன் கையாளுங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி சம நிலையுடன் இருக்க முயலுங்கள். தெய்வீகக் காரியங்கள் உங்கள் மனதுக்கு நிம்மதியையும் மன நிறைவையும் தரும்.

நீங்கள் உங்கள் பணியில் சில தவறுகளை செய்ய நேரலாம். பணி செய்யும் முறையை திட்டமிட்டு அமைத்துக் கொள்வது நல்லது.

இன்று உங்கள் வாழ்க்கைத் துணையாரின் விருப்பப்படி நடந்து கொள்ளுங்கள். இதன் மூலம் இல்லத்தில் தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்கலாம்.

இன்று பண வரவிற்கான வாய்ப்புகள் குறைவாக காணப்படுகின்றது. கூடுதல் செலவினங்களை நீங்கள் சந்திக்க நேரலாம்.

## ரிஷபம்

இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாக அமையாது. நீங்கள் கடுமையாகப் போராட நேரலாம். இன்று அசௌகரியங்கள் காணப்படலாம். துயரமான சூழ்நிலை காரணமாக நீங்கள் திருப்தியையும் மன அமைதியையும் இழப்பீர்கள்.

இன்று பணியில் திருப்திகரமற்ற நிலை இருக்கும். பணியிடத்தின் சூழ்நிலையும் சாதகமாக இருக்காது.

நல்ல புரிந்துணர்வு இல்லாத காரணத்தால் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேரிடலாம்.

இன்று பணப்புழக்கம் குறைவாகவே இருக்கும். இழப்புகளை சமாளிக்க பெரிய முதலீட்டிற்கான முடிவை தவிர்க்கவும்.

மன அழுத்தத்தின் காரணமாக தலைவலி ஏற்படலாம்.

## மிதுனம்

இன்று அனைத்து விஷயங்களும் சுமுகமாக நடக்கும். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்கள் மேன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் நல்ல வாய்ப்பு கிடைக்கும் அற்புதமான நாள்.

இன்று வளர்ச்சிக்கான சிறந்த ஒரு வாய்ப்பை நீங்கள் இழக்க நேரிடலாம். திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட்டு செயலாற்றுங்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் மேம்போக்காகவும் சுமுகமாகவும் நடந்து கொள்ள வேண்டும். வலுவான அனுகுமுறை நல்லுறவை பாதிக்கும்.

இன்று மோசமான நிதிநிலைமை காணப்படுகின்றது. எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

இன்று சளி இருமல் போன்ற உபாதைகள் ஏற்டலாம்.

## கடகம்

எதிர்காலத்தில் சாதிப்பதற்கான பெரிய கனவொன்றை இன்று காண்பீர்கள். உங்கள் இலக்கை நோக்கி உங்கள் ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள்.

மேலதிகாரிகள் உங்கள் திறமையை பாராட்டுவார்கள். உங்கள் செயலுக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்களைப் பெருமையாக நினைப்பார்கள்.

இன்று உங்கள் வாழ்க்கைத் துணையுடன் இனிமையான வார்த்தைகளையும் உணர்வுகளையும் பகிரந்து கொள்வீர்கள். உங்கள் எதிர்காலம் பற்றி முடிவு எடுப்பீர்கள்.

இன்று பண விஷயங்களில் சுதந்திரமாகவும் திருப்தியுடனும் செயல்படுவீர்கள். உபயோகமான காரியங்களுக்காக இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

## சிம்மம்

இன்று நீங்கள் துடிப்புள்ளவராக இயங்க மாட்டீர்கள். நீங்கள் உங்கள் செயல்களை விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் செய்ய வேண்டியது அவசியம்.

உங்கள் உழைப்பிற்கான பலன் இன்று கிடைக்கும். உங்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் வாழ்க்கைத் துணையிடம் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்ற நாள். உங்களுடைய சமநிலையான மற்றும் சமயோசித அணுகுமுறையே அதற்கு காரணமாக அமையும்.

பண வரவு தாராளமாகக் காணப்படும். உடனடி மற்றும் எதிர்கால தேவைகளுக்கான பணம் உங்களுக்கு கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

## கன்னி

இன்று நீங்கள் அசௌகரியங்களை உணர்வீர்கள். மன அழுத்தம் ஏற்படும். பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடுவதன் மூலம் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இன்று சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நீங்கள் உங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

மனக் குழப்பங்கள் காரணமாக தவறாக புரிந்து கொண்டு உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். அத்தகைய உணர்வுகளை தவிர்ப்பது நல்லது.

பண இழப்புகள் ஏற்படலாம். பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று தலைவலி ஏற்படலாம்.

## துலாம்

இன்று எதிர்பாராத சில நிகழ்வுகள் காரணமாக சற்று பதற்றமான நிலை காணப்படும். நீங்கள் என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் நிலை காணப்படும்.

இன்று வேலைகள் மலை போல் வந்து குவியும். எனவே அதற்கேற்றாற்போல் திட்டமிட்டு வேலை செய்வது நல்லது.

நகைச்சுவை உணர்வுடன் இருக்க முயலுங்கள். மனதை அமைதியாக வைத்திருங்கள். உங்கள் துணையுடன் பேசும் பொழுது அவரை புரிந்து கொண்டு நல்லுறவை பராமரிக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலை கவலையை அளிக்கக் கூடியதாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள்.

தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இறைவழிபாட்டின் மூலம் அதிலிருந்து விடுபடலாம்.

## விருச்சிகம்

இன்றைய நாள் உங்களுக்கு முன்னேற்றகரமான நாளாக அமையும். உங்கள் இலக்கை அடைவதற்கான வழிமுறைகளை காண்பீர்கள். உங்கள் பாதையில் வரும் தடைக் கற்களை உடைத்தெறிவீர்கள்.

இன்று உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும். புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

நீங்கள் இன்று உங்கள் வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வும் நல்லுறவும் மேம்படும்.

இன்று திருப்திகரமான நிதிநிலை இருக்கும். சேமிப்பு மூலம் பணவரவு கூடும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.04.2024




நடப்பவை யாவும் நன்மைக்கே என்று எளிதாக எடுத்துக்கொண்டால் இன்று நற்பலன்களே கிட்டும். புதிய மனிதர்களுடன் பழகுவதற்கும் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இன்று உகந்த நாள். உங்களைச் சுற்றியிருப்பவர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வதன் மூலம் உங்கள் வாழ்க்கை நன்றாக இருக்கும்.

நீங்கள் எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி வேலை செய்வீர்கள். உங்களுடைய இந்த மனப்பான்மை காரணமாக வேலையை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுத்து உங்கள் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அமைதியாக சகஜமாகப் பழகுவீர்கள். அதனால் நல்ல புரிந்துணர்வும் நல்லுறவும் மேம்படும்.




உங்களின் குறிக்கோள்களை அடைய மிகச் சிறந்த நாளாக இந்த நாள் அமையும். பயணங்களால் வளர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. செழிப்பான எதிர்காலத்துக்கு இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று மலை போல் குவியும் வேலையின் சுமை காரணமாக கவலைப்படுவீர்கள். திறமையுடன் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மனதுக்குள் அலைமோதும் கவலைகள் காரணமாக உங்கள் துணையுடன் பேசும் போது பேச்சில் கடுமை காணப்படும்.

இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். வரவுடன் செலவும் சேர்ந்து வருவது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

நேர்மறையான சிந்தனைகள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று அசௌகரியங்களும் தேவையில்லாத மன வருத்தங்களும் மேலும் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று அதிக பணிகள் காரணமாக நீங்கள் பிஸியாக இருப்பீர்கள். வேலை அதிகமாக இருந்தாலும் புத்திசாலித்தனமாக சமாளிப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு அல்லது வாக்குவாதம் ஏற்படலாம். நட்பான அணுகுமுறை தேவை.

நிதியைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

முந்தைய இரவின் தூக்கமின்மை காரணமாக மன அழுத்தமும் அதன் விளைவாக தலைவலியும் காணப்படும்.




இன்று நீங்கள் கவலையுடன் காணப்படுவீர்கள். மன அழுத்தமான சூழ்நிலைகளில் சமநிலை இழந்து காணப்படுவீர்கள். மனதை அமைதியுடனும் இலேசாகவும் வைத்திருக்க வெளியிடங்களுக்கு குடும்பத்துடன் செல்லுங்கள்.

இன்று உங்கள் வேலையில் பிஸியாக இருப்பீர்கள். பணி நிமித்தமாக பயணங்களை மேற்கொள்வீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள். துணையுடனான உங்கள் பேச்சு இன்று பயனுள்ள பேச்சாக அமையும்.

சில ஆரம்பகட்ட போராட்டங்கள் மற்றும் தடைகளுக்கு பின் பணவரவு உண்டு. நீண்ட காலம் நிலுவையிலுள்ள பணம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.







# பண்டிகைக் காலத்தில் மின் துண்டிப்பு இல்லை

பராமரிப்பு பணிகளுக்காக மேற்கொள்ளப்படும் மின் துண்டிப்புகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் பண்டிகைக்காலத்தை முன்னிட்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் எவ்வித இடையூறுமின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கு அவசியமான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நீர் மின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், தொடர்ச்சியாக



மின்சாரத்தை விநியோகிப்பதற்கு அது சவாலான விடயமாக காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தேவையான எரிபொருளை அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போதுமான எரிபொருள் கையிருப்பு நாட்டில் காணப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எவ்வித இடையூறும் இன்றி மக்களுக்கு அவசியமான எரிபொருளை விநியோகிக்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, Indian Oil நிறுவனம் மற்றும் Sinopec ஆகிய நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# பள்ளிவாசல்களுக்கு விசேட பாதுகாப்பு

நோன்பு பெருநாளை முன்னிட்டு பள்ளிவாசல்களை அண்மித்து விசேட பாதுகாப்பு திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் ஆலோசனையின் பிரகாரம், பொலிஸ், விசேட அதிரடிப் படையினர் மற்றும் முப்படையினர் இணைந்து பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கமைய, அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் உரிய பள்ளிவாசல்களின் மௌலவிகளை சந்தித்து, இந்த விசேட வேலைத்திட்டம் தொடர்பில் முன்னேற்பாட்டு ஒழுங்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனடிப்படையில், நாடு முழுவதும் உள்ள 3,203 பள்ளிவாசல்களில் துஆ பிரார்த்தனை இடம்பெறும் 2,453 பள்ளிவாசல்களுக்கு தேவையான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 5,580 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 510 பேரும, முப்படையின் 1,260 பேரும் உள்ளடங்கலாக 7,350 இற்கும் மேற்பட்ட பாதுகாப்பு தரப்பினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மானிப்பாய் மருதடி ஆலயத்தில் சப்பரத வெள்ளோட்டம் இன்று




யாழ்ப்பாணம் – மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய சப்பரத வெள்ளோட்டம் இன்று புதன்கிழமை மாலை 04 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதனை தொடர்ந்து மாலை திருவிழா இடம்பெற்று ,இரவு 08.30 மணியளவில் சப்பரத ஸ்தபதியை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அதன் போது, சங்குவேலி – பழனி சிற்பாலய ஸ்தபதி ஆசாரி சரவணபவன் அருளகனுக்கு "விஸ்வகர்ம வித்தகன்" எனும் சிறப்பு பட்டம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

ஆலய தர்மகர்த்தா சபை செயலாளர் து. பிரதீபன் தலைமையில் இடம்பெறவுள்ள கௌரவிப்பு நிகழ்வில், ஆசியுரையை தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ நாகேந்திர திவாகரக் குருக்களும், வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரனும், பாராட்டு உரைகளை சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர் திருவிழா இடம்பெறவுள்ளது. தேர் திருவிழா அன்று காலை 10 மணிக்கு வசந்தமண்டப பூஜை ஆரம்பமாகும்.

வசந்தமண்டப பூஜையை தொடர்ந்து உள்வீதி உள்ள வரும் மருதடி விநாயக பெருமான் மதியம் 12 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார்.

தேர் உற்சவம் நடைபெற்று ,மாலை 3 மணிக்கு பச்சை சாத்துதல் இடம்பெறும்.



# தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கு மூன்று நாள்கள் வதிவிட செயலமர்வு

## தம்புள்ள ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது

அமெரிக்க தூதரகத்தின் ஏற்பாட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட மூன்று நாள் வதிவிட செயலமர்வு ஒன்று கூடல் கடந்த 5,6,7 ஆம் திகதிகளில் தம்புள்ளவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது.

International Republican Institute (IRI) எனும் நிறுவனம் இந்தச் செயலமர்வை நடத்தியது.

இந்தச் செயலமர்வை தமிழரசுக் கட்சியின் சார்பில் ஒழுங்கு செய்திருந்த அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இச்செயலமர்வு பற்றித் தெரிவித்தவை வருமாறு:-

பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி என்பனவற்றுக்கு இவ்வாறான செயமர்வுகள் மேற்கொள்வதைப் போன்று எமது தமிழரசுக் கட்சிக்கும் இவ்வாறான செயலமர்வை நடாத்த வேண்டுமென ஒரு வருட காலத்திற்கும் மேலாக கோரிக்கை முன்வைத்தேன்.

கிட்டத்தட்ட ஒரு வருட காலம் எனது முயற்சியின் அடிப்படையில் அமெரிக்கத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இது இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய உறுப்பினர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படும் எட்டுத் தமிழ் மாவட்டங்களும் அதனுடன் கொழும்பு மாவட்டத்திலும் உள்ள எமது கட்சியினுடைய உறுப்பினர்களுக்கான செயலமர்வு மேற்கொள்ளப்பட்டது.

கட்சியினுடைய மனித உரிமைகள் மற்றும் பிரதானமான இலக்குகள், பொறுப்புக் கூறலும் அரசியல் தீர்வும் போன்ற விடயங்களும் இச் செயலமர்வில் பேசப்பட்டன.

அந்த வகையில் முதல் நாளில் பொறுப்புக் கூறல் விடயம் தொடர்பாகவும், இரண்டாவது நாளில் அரசியல் தீர்வு தொடர்பான அரசமைப்பு சார்ந்த செயலமர்வும், இவை இரண்டு விடயங்களையும் வைத்து எதிர்காலத்தில் எமது கட்சிக்கு தேர்தலின் போது பிரச்சாரம் மேற்கொள்வதற்காக குயஉநடிழழம மற்றும் ஏனைய சமூக வலைத்தளங்கள் சம்பந்தமான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இதற்கான தெரிவுகள் மாவட்ட மட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அங்குள்ள தலைவர்களுடனும் கலந்துரையாடி அச்செயலமர்வில் பங்குபற்றுவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதி நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் கலந்து கொண்டார். – என்றார்.



















# அபுதாபி இந்து ஆலயத்தில் இப்தார் நிகழ்வு!

## மத நல்லிணக்கத்தின் உச்சம்!! மன்னர், அமைச்சர்கள் விஜயம்!!!

( வி.ரி.சகாதேவராஜா)

அபுதாபியில் உள்ள பிரம்மாண்டமான இந்து ஆலயத்தில் ஐக்கிய அரபு ராஜ்யத்தின் மன்னர்கள், அமைச்சர்கள் முன்னிலையில் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு சிறப்பாக இடம் பெற்றது.

இது மத நல்லிணக்கத்தின் உச்சம் என்று கருதப்படுகிறது.

“இஸ்லாமியர்கள் தந்த இந்து ஆலயம்” என்று போற்றப்படுகின்ற அபுதாபி டீயிள ஹிந்து மந்திர் நாராயணன் ஆலயத்தில் இந்த நிகழ்வு கடந்த ஞாயிறன்று கோலாகலமாக இடம்பெற்றது.

உலகின் தனி முஸ்லிம் நாடான அபுதாபியில் முதலாவது பிரமாண்டமான இந்து ஆலயம் 700 கோடி ரூபா இந்தியப் பணத்தில்) செலவில் கட்டப்பட்டு இந்திய பிரதமர் மோடியினால் திறந்து வைக்கப்பட்ட பின் இடம் பெறும் முதலாவது இப்தார் நிகழ்வு இதுவாகும்.

நிகழ்வுக்கு அபுதாபி, துபாய் ஆகியவற்றின் ஷேக் (மன்னர்கள்) மற்றும் அமைச்சர்கள் வருகை தந்திருந்தார்கள்.

மன்னர் ஷேக் நகயன் முபாரக் அலி உரையாற்றியபோது – உலக சமாதானம், மத நல்லிணக்கம் பற்றி குறிப்பிட்டு இது பெரும் மகிழ்ச்சி அளிக்கின்றது என்று சொன்னார்.

பெப்ஸ் ஹிந்து மந்தீர் ஆலயத்தின் பிரதம குரு பேசுகையில் –

மத நல்லிணக்கம் சகிப்புத்தன்மை பொறுமை சமாதானம் போன்றவற்றிற்கு இலக்கணமாக இந்த பிராந்தியம் திகழ்கின்றது. இங்கு வருகை தந்த ஷேக் மற்றும் அமைச்சர்களை உளமார வரவேற்கிறோம் என்று சொன்னார்.

துபாயிலிருந்து அங்கு சென்ற சுந்தரலிங்கம் நகுலன்(நற்பிட்டிமுனை) தலைமையிலான இலங்கை இந்துக்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

துபாயில் உயர்பதவி வகிக்கும் திரு சுந்தரலிங்கம் நகுலன் கூறுகையில்–

ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தில் இருக்கக்கூடிய இஸ்லாமிய மன்னர்கள், அமைச்சர்கள் இந்த ஏழு நாடுகளிலும் வசிக்கின்ற மக்களிடையே எந்த இன, மத, நிற, சாதி பேதத்தை சிறிதளவு காட்டாது மிகவும் கண்ணியமாக மதிப்புடன் நடத்தி வருகின்றார்கள். அந்த வகையில் தனி முஸ்லிம் நாடான அபுதாபியில் பிரமாண்டமான இந்து ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் வாழுகின்ற துபாயில் மூன்று ஆலயங்கள் இருக்கின்றன. அனைத்தையும் இஸ்லாமிய சகோதரர்களின் பெரும்பங்குடன்தான் அதை அமைத்திருந்தார்கள். உலகிலே இன நல்லிணக்கத்திற்கு முன்னுதாரணமாக விளங்குவது ஜக்கிய அரபு ராஜ்யம் ஆகும்.

இங்கு நிலவுகின்ற மத நல்லிணக்கம் இனசௌஜன்யம் உலகெங்கும் நிலவினால் உலகில் சமாதானம் சுபீட்சம் தானாக நிலவும் என்பது எனது நம்பிக்கை – என்று சொன்னார்.

இந்த ஆலயம் அமைப்பதற்காக பல கோடி ரூபா பெறுமதியான 27 ஏக்கர் காணியை இலவசமாக ஐக்கிய அரபு ராஜ்யத்தின் முடிக்குரிய இளவரசர் அரசர் சேக் முகமது பின் சயீட் நகயன் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்த ஆலயத்தில் சகல இன மக்களும் கலந்து கொண்டு வணக்கத்தை தெரிவிக்கலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.





